**Deposition of witness**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the court of Judicial Magistrate No.II, Tindivanam.**

**CASE NO. CC. 20/2011**

**Prosecution witness – PW –11**

| | | | |
|---|---|---|---|
| Date | 08.05.2026 | Taluka. | |
| Name | பன்னீர்செல்வம் | Calling | |
| Father/Husband Name | காசி | Age | 77 |
| Village/City | கடலூர் | P.S | |

**A2, A3, A5, A7, A10, A15 present. A6, A11 absent. 317 petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் கடந்த 31.03.2007–ம் தேதி உதவி கமிஷனர் ஆக பணிபுரிந்து ஸ்ரீரங்கத்திலிருந்து ஓய்வு பெற்று விட்டேன். 03.03.2004–ல் விழுப்புரம் வணிகவியல் குற்றப்புலனாய்வுத் துறையில் துணைக் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்த பொழுது மேற்படி நிலைய குற்ற எண்.3/2005–ன் கீழ் பதிவுசெய்யப்பட்ட வழக்கினை உயர் அதிகாரிகளின் உத்தரவின்படி மேற்படி வழக்கை ஆரம்ப கட்டத்தில் புலன் விசாரணை செய்த ஆய்வாளர் திரு.விநாயகம் என்பவரிடமிருந்து வழக்கு கோப்பினை பெற்று எனது தொடர் புலன் விசாரணைக்கு கடந்த 23.06.2005–ல் எடுத்துக் கொண்டேன். வழக்கு கோப்பினை எடுத்துக்கொண்ட போது எனக்கு முன்பு புலன் விசாரணை அதிகாரியிடம் இருந்து இந்த வழக்கு தொடர்பான ஆவணங்களை பெற்று பரிசீலனை செய்து இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி வேல்முருகன் வயது 35 த.பெ. கோவிந்தன் என்பவரை 28.06.2005–ம் தேதி மாலை சுமார் 4:00 மணிக்கு கைதுக்கான காரணம் குறி கைது செய்து அலுவலகத்திற்கு அழைத்து வந்து

திரேத பரிசோதனை செய்து தக்க வழி காவலுடன் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

2. பின்னர் 02.05.2006 அன்று பணியிட மாற்றம் செய்யப்பட்டதால் வழக்கு கோப்பினை துணை கண்காணிப்பாளர் ரீட்டா அவர்களிடம் வழக்கு கோப்பினை ஒப்படைத்தேன். பின்னர் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை. (Except A13, A17)**

1. வழக்கு கோப்பினை எந்த தேதியில் நான் திரு. விநாயகம் அவர்களிடம் இருந்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால் 23.06.2005–ல் எடுத்துக் கொண்டேன். நான் வணிக குற்றப்பிரிவுத்துறையில் எத்தனை ஆண்டுகளாக பணியில் இருந்தேன் என்றால் 03.03.2004 முதல் 02.05.2006 வரை பணியில் இருந்தேன். இந்த வழக்கில் புகார் ஆனது தபால் மூலமாக துணைப்பதிவாளர் இடமிருந்து வரப்பட்டது என்றால் ஆய்வாளருக்கு வந்தது. புகாரை பெரும் காலத்தில் நான் பணியில் தான் இருந்தேன் என்றால் சரிதான். முறைகேடு நடைபெற்ற காலத்தை என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலுமா என்றால் 01.01.1993 – 30.11.2004 வரை முறைகேடு நடந்ததாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்பதை நான் அறிந்து கொண்டேன். என்னை வழக்கு சம்பந்தமாக யாரேனும் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் எத்தனை ஆவணங்களை பரிசீலனை செய்தேன் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது, ஆய்வாளர் வைத்திருந்த அனைத்து ஆவணங்களையும் பரிசீலனை செய்தேன். நான் நேரடியாக சென்று கூட்டுறவு வங்கியில் இருந்து எந்த ஆவணத்தையும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

2. இந்த வழக்கின் 1–வது எதிரியால் சில ஆவணங்கள் மறைக்கப்பட்டு அவர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டது என்ற விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். மறைக்கப்பட்ட ஆவணங்களை 1–வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் நான் கைப்பற்றவில்லை. கூட்டுறவு வங்கிகளின் சட்டப்படி ஒவ்வொரு வங்கியும் அதன் துணைவிதிகள் படி தான் இயங்கும் என்றால் சரிதான். நிர்வாகத்திற்கு ஏற்ப அவ்வப்போது துணைவிதிகள் திருத்தம் செய்யப்படலாம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரம்மதேசம் கூட்டுறவு வங்கி எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரம்மதேசம் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் ஒரே துணை விதிகளின் அடிப்படையில் தான் இயங்கி வந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கூட்டுறவு வங்கியில் வழங்கப்படும் கடன்கள் மற்றும் கடன் மனுக்களை பரிசீலனை செய்வது, பராமரிப்பது மற்றும் வசூல் செய்வது ஆகியவற்றை 1–வது எதிரியான சங்க செயலாளர்தான் செய்வார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மற்ற எதிரிகளான வங்கி ஊழியர்களுக்கு உள்ள கடமைகள் பற்றி துணை விதிகளில் குறிப்பிடவில்லை என்றாலும் அதனால் நிதிமுறை கேட்டிருக்கும் வங்கி ஊழியர்கள் பொறுப்பாக மாட்டார்கள் என்றாலும் சங்க செயலாளர்தான் பொறுப்பாவார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது.

3. ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் யாருடையது என்று நிரூபிக்கும் பொருட்டு கையெழுத்து நிபுணர்களுக்கு அனுப்பி அந்த கையொப்பங்கள் எதிரிகளுடையது என்பதற்காக நீதிமன்றத்தில் ஆவண ரீதியாக எந்த நிரூபனமும் செய்யவில்லை என்றால் நான் செய்யவில்லை. எதிரி

வேல்முருகன் என்ன காரணத்திற்காக கைது செய்தேன் என்றால் ஆவணம் அடிப்படையில் கைது செய்தேன். மேற்படி எதிரி வேல்முருகனிடமிருந்து வாக்குமூலம் ஏதேனும் பதிவு செய்தேனா என்றால் இல்லை. வங்கியில் இருந்து பெறப்பட்ட ஆவணங்கள் எந்த ஆவணங்கள் மூலமாக பெறப்பட்டது என்றால் அது ஆய்வாளருக்கு தான் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக நான் தனிப்பட்ட முறையில் ஏதேனும் சாட்சிகளை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் ஏதேனும் எதிரிகளை வழக்கில் இருந்து நீக்கினேனா என்றால் இல்லை. 1973–ல் இருந்து 2003 வரை ஆடிட்டர் ஒருவரை நியமனம் செய்து வருடா வருடம் கூட்டுறவு வங்கியின் கணக்குகளை தணிக்கை செய்து அதன் அறிக்கையை துணை பதிவாளர் அவர்களுக்கு அனுப்பி வைப்பார் என்றால் இருக்கலாம். முறைகேடு காலத்தில் துணைப் பதிவாளருக்கு தணிக்கை செய்து அனுப்பிய அறிக்கை பற்றி நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

4. நான் 6–வது எதிரியை மட்டும் தான் கைது செய்தேன் என்றாலும் மற்ற எதிரிகளைப் பற்றி நான் எதுவும் தெரிந்து கொள்ளவில்லை என்றாலும் சரிதான். 6–வது எதிரி வேல்முருகன் எந்த ஆவணங்களை எழுதவில்லை என்றாலும் 1–வது எதிரியான சங்க செயலாளர்தான் ஆவணங்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று எழுதினார் என்றாலும் அவர்தான் நிதிமுறை கேட்டிற்கு காரணம் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. 2 முதல் 7 வரையிலான எதிரிகளை இந்த வழக்கில் குற்றவாளிகளாக சேர்த்தது தவறு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் கண்ட நிதிமுறை கேட்டை பொறுத்து நேரடியாக வங்கியில் சென்று எந்த சாட்சிகளையும் விசாரணை செய்யாமல் எங்களது ஆய்வாளர் தயார் செய்த ஆவணங்களை எங்களது அலுவலகத்திலேயே வைத்து

அதற்கு ஏற்றார் போல நான் பார்வையிட்டதாக தவறாக ஒரு அறிக்கை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நிர்வாக குழுவில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் ஞாபகம் இல்லை.

5. பிரம்மதேசம் கூட்டுறவு சங்கத்திற்கு இடம் வழங்கிய நிர்வாக குழு தலைவர் ஆன சிதம்பரநாதன் இந்த வழக்கில் எதிரியாக உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நிர்வாக குழு தலைவராக இருக்கும் நபர் வங்கியின் ஊழியர் இல்லை என்றாலும் உறுப்பினர்களால் நியமனம் செய்யப்படுபவர் என்றாலும் சரிதான். மேற்படி சிதம்பரநாதன் எந்த நிதிமுறைடும் செய்யவில்லை என்றாலும் அவரை இந்த வலைகள் சேர்த்தது தவறு என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் நான் எந்த ஆவணங்களையும் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான். பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியின் துணை விதிகளை நான் பார்வையிடவில்லை என்றால் சரியல்ல, பார்வையிட்டேன். இந்த வழக்கில் நான் எந்த ஆவணங்களையும் பார்வையிடவில்லை என்றாலும் எங்களது ஆய்வாளருக்கு ஆதரவாக நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.நான் எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டு 17–வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. எனது உயர் அதிகாரி வழங்கிய உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். அந்த உயர் அதிகாரியின் உத்தரவு எனக்கு எந்த தேதியில் கிடைத்தது என்றால் 23.06.2005 ஆகும். நான் விசாரணை அதிகாரியையோ துணை பதிவாளர் விசாரணை செய்து தனிப்பட்ட

முறையில் வாக்குமூலம் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. தனி அலுவலரான 17–வது எதிரி கருணாநிதியை விசாரணை செய்து ஏதேனும் நான் வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. முறைகேடு நடந்ததாக சொல்லப்படும் பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் நான் நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டேனா என்றால் எதிரியை கைது செய்த அன்று நான் சென்றேன். நான் ஆய்வு ஏதேனும் மேற்கொண்டேனா என்றால் இல்லை. நான் கூட்டுறவு சங்கத்தில் வைத்து தான் கைது செய்தேனா என்றால் இல்லை, வீட்டில் வைத்து கைது செய்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஆவணங்களையும் எனது விசாரணைக்காக நான் கைப்பற்ற வில்லை என்றால் சரிதான்.

2. இந்த வழக்கு சம்பந்தமாக இறுதி அறிக்கை நான்தான் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. விசாரணை அதிகாரி ஆரோக்யராஜ் அவர்களின் அறிக்கையை எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் அப்பொழுது பார்த்தேன், ஆனால் தற்போது ஞாபகம் இல்லை. அதிகாரி விசாரணை செய்து என்னிடம் எப்போது அறிக்கையை சமர்ப்பித்தார் என்றால் என்னிடம் கொடுக்கவில்லை, ஆய்வாளரிடம் கொடுத்தார். எந்த தேதியில் என் வசம் ஆய்வாளர் வழக்குக்கோப்பை ஒப்படைத்தார் என்றால் 23.06.2005. மேற்படி 23.06.2005 அன்று என்னிடம் வழக்கு கோப்புகளை ஒப்படைத்த போது அதிலிருந்த விசாரணை அதிகாரி ஆரோக்கியராஜ் அவர்களின் விசாரணை அறிக்கை சம்பந்தமாக நான் ஏதேனும் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. விசாரணை அதிகாரி ஆரோக்கியராஜ் குறைபாடு உள்ள அறிக்கையை தான் தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதை சரிவர

விசாரணை செய்யாமல் ஆய்வாளர் என்னிடம் கோப்புகளை ஒப்படைத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த குறைபாடுள்ள அறிக்கையின் அடிப்படையில் தான் ஆய்வாளர் 17வது எதிரியின் பெயரை தவறுதலாக சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல.

3. நான் சரியான முறையில் விசாரணை செய்திருந்தால் இறுதி அறிக்கையில் 17வது எதிரியின் பெயரை சேர்த்திருக்க மாட்டேன் என்றால் இறுதி அறிக்கை நான் தயார் செய்யவில்லை. 17வது எதிரி கூட்டுறவு சங்கத்தில் நிரந்தர பணியாளர் அல்ல என்றாலும் தனி அலுவலராக ஒரு வருட காலம் பணி புரிந்தார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. இறுதி அறிக்கையில் ஆவணங்களை பார்வையிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வங்கி சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் மறைத்து வைக்கப்படவில்லை என்றாலும் அது களவாடப்படவில்லை என்றாலும் அது பற்றி எனக்கு தெரியவில்லை. முதல் இனத்தில் உள்ள உறுப்பினர்கள் யாரையும் நான் தனிப்பட்ட முறையில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். முறைகேடு நடந்ததாக சொல்லப்பட்டுள்ள 1993–2004 வரையிலான காலகட்டத்தில் விசாரணை அதிகாரி ஆரோக்கியராஜ் என்பவர் பிரம்மதேசம் கூட்டுறவு வேளாண்மை தொடக்க வங்கியில் பணிபுரிந்து வந்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆரோக்கியராஜ் அங்கு பணிபுரிந்து விட்டு கடன்களைப் பொறுத்து உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அங்கு பணிபுரிந்த நபரை விசாரணை அதிகாரியாக நியமனம் செய்தது தவறு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சரியான முறையில் மாவட்ட பதிவாளரையோ ஆரோக்கியராஜ் அவர்களையும் விசாரணை செய்திருந்தால்

ஆரோக்கியராஜ் விசாரணை அதிகாரியாக நியமனம் செய்தது தவறு என்று தெரிய வந்திருக்கும் என்றால் நான் விசாரிக்கவில்லை.

4. 17வது எதிரி தனி அலுவலராக இருந்த காலத்தில் விசாரணை அதிகாரியான ஆரோக்கியராஜ் வங்கியில் இருந்து ஆவணங்களை தன்னுடைய அனுமதி இல்லாமல் எடுத்து சென்று விட்டார் என்றாலும் அதன் அடிப்படையில் குற்ற வழக்கு 203/2005 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அந்த வழக்கின் அடிப்படையில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. ஆரோக்கியராஜ் மாண்புமிகு நீதிமன்றத்தில் 376/2005 என்ற குற்ற வழக்கு சங்க செயலாளருக்கு எதிராக தாக்கல் செய்து அந்த வழக்கில் வங்கி ஆவணங்களை சங்க செயலாளரே ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தனி அலுவலர் மீது எந்த குற்ற நடவடிக்கையும் எடுக்க முடியாது என்றாலும் அவர் மீது துறைரீதியான நடவடிக்கை தான் எடுக்க முடியும் என்று சுற்றறிக்கை உள்ளது என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. தீர்மானத்தில் உள்ள கையொப்பங்களை நிபுணருக்கு அனுப்பி உண்மை தன்மையை நான் அறிந்து கொள்ளவில்லை என்றால் ஆய்வாளர் செய்துவிட்டார், அதனால் நான் செய்யவில்லை.

5. இந்த குற்ற சம்பவத்திற்கும் 17வது எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் வேண்டும் என்றே விசாரணை அதிகாரியாகிய ஆரோக்கியராஜ் அவரை பழி வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு 17-வது எதிரியை இவ்வழக்கில் சேர்த்துள்ளார் என்றாலும் அதை சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கையில் அவருடைய பெயரை சேர்த்துள்ளார்கள்

என்றாலும் அதன் அடிப்படையில் இறுதி அறிக்கையில் 17வது எதிரியின் பெயரை சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. 17 வது எதிரிக்கும் இனம் ஒன்று தொடர்பான குற்றத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் அவர் கையாடலுக்கு உடந்தையாக இருக்கவில்லை என்றாலும் சரியல்ல.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு கணினியில் பதிவுசெய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்